உ

சித்திவிநாயகர் துணை.

மதுரை

# ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேஸ்வராள் திருக்கல்யாணக் கீர்த்தனைகள்.

இஃது

வேம்பத்தூர் பிர்மஸ்ரீ

பிச்சுவையரவர்கள் கனிஷ்ட சகோதராராகிய

**சர்க்கரை பாரதிகளால்**

பாடப்பெற்று

மதுரை

ஸ்ரீமீனாக்ஷிசுந்தரேஸ்வராள் வகையறா தேவஸ்தானம்

டிரஸ்டியும் மாஜீ தாசில்தாருமான

**ஸ்ரீமான் R. துரைசாமி நாயுடுகாரவர்களின்**

பொருளுதவியால்

வேம்பத்தூர்

சிலேடைப்புலி பிச்சுவையரவர்கள்

குமாரர்

**நடேச பாரதியாரால்**

மதுரை

ஹரிஸமய திவாகரம் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

1934

காபிரைட்] [வி



உ

சித்திவிநாயகர் துணை.

மதுரை

# ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேஸ்வரராள் திருக்கல்யாணக் கீர்த்தனைகள்.

இஃது

வேம்பத்தூர் பிர்மஸ்ரீ

பிச்சுவையரவர்கள் கனிஷ்ட சகோதரராகிய

**சர்க்கரை பாரதிகளால்**

பாடப்பெற்று

மதுரை

ஸ்ரீமீனாக்ஷிசுந்தரேஸ்பராள் வகையரு தேவஸ்தானம்

டிரஸ்டியும் மாஜீ தாசில்தாருமான

**ஸ்ரீமான் R. துரைசாமி நாயுடுகாரவர்களின்**

பொருளுதவியால்

வேம்பத்தூர்

சிலேடைப்புலி பிச்சுவையரவர்கள்

குமாரர்

**நடேச பாரதியாரால்**

மதுரை

ஹரிஸமய திவாகரம் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

1934

காபிரைட்]

[விலை அணா 4

உ

# மதிப்புரை.

## வெண்பாக்கள்.

1. எத்திசையும், போற்று மெழிலார், மதுரை நகர்ச்
சித்திவி, நாயகனைச், சிந்தித்தாற்—பத்தியுடன்
பாடலாஞ், சீர்பெறலாம், பாவனைத்துந், தேர்ந்துளங்கொண்
டாடலாம், யாவுமுற, லாம்.

## பதிப்பாளர் பாடிய வெண்பா.

3. எல்லோரும் போற்று மெழின்மதுரை மீனாக்ஷி
கல்யாணக் கீர்த்தனையைக் காசினியோர்—சொல்லுதற்கு
அச்சிற் பதிபித் தளித்த துரைச்சாமி
உச்சிதமாய் வாழ வுவந்து

திருபுவனத்திலு மிக்க திருவுடைத்தாய பாண்டி நாட்டின் றலைநகராகிய சிவன் முத்திபுரமான மதுரையம்பதிக்குக் கிழக்கே, இரண்டு காத தூரத்திலுள்ளதும், குலசேகர பாண்டியனாற் கலி பிறந்த பதினாறாம் ஆண்டிற் பூர்வசிகையந்தணர்கள், இரண்டாயி ரத்தெண்மருக்கு முற்றூட்டாகத் தானஞ்செய்யப் பெற்றதுமாகிய வேம்பத்தூரென்னுங் கிராமத்தில், வாழ்வுற்றவரும் பாகவத, பக வத்கீதை, பாடுதுறை, ஞானவாசிட்டம் திருவிளையாடல், பிரபந்த தீபிகை தமிழிற்சௌந்தரியலகரி முதலிய பலநூற்களியற்றியவாசி ரியர்களின்பரம்பரையினரும் அறுபத்து நான்கு தண்டிகைப்புலவர் களின் வழித்தோன்றலும் வேம்பத்தூர்ச்சங்கவித்துவான்களில்ஒரு வரும் தனஞ்சயகோத்திரத்தினரும், சிலேடைப்புலிபிச்சுவையரவர் களின் கனிஷ்டரும் சாஸ்தாவையரென்ற வியற்பெயரையுடைய வருமெனது சிறியதந்தையாருமாகிய சர்க்கரைப் பாரதியாரே, இக்கீர்த்தனை நூலின்ஆசிரியராவர். இவர் தமிழ்ப் பயிற்சியோட மையாது சங்கீதப் பயிற்சியும் சிவகங்கை சமஸ்தானத்தில் வாழ்ந்துவந்த மகா-ா-ா-ஸ்ரீ சின்னவைத்தி ஐயரென்ற சங்கீத வித்துவானிடம் நன்கு செய்துகொண்டவர்.

இவரது சங்கீதத்திறமை தமிழ்க்கவித்திறமை கடவுளி டத்தன் புடைமையாகிய குண விசேடங்களைக் கீர்த்தனைகளின

மைப்புக்களாலும், விருத்தமுதலிய பாக்களினயங்களாலு மிந் நூலைப் படிப்போர் தெரிந்து கொள்வரென்பது எனது துணிபு. இக்கீர்த்தனைகள் முற்றும் ஆலவாயிறைவன் திருவிளையாடல் சம்பந்தமாக விருப்பதாலும் கதை செய்வதற்கும் பஜனை செய்வதற்குமுரித்தாக விருப்பதாலுமிந்நூலை வெளிப்படுத்தின் பக்த கோடிகளும் சங்கீதாபிமானிகளும் படித்தின்புறுவார்களென்பது பற்றியும் வெளியிடத்துணிந்தேன். இச் சங்கீதநூலை யிந்நூலாசிரியரின் மாணுக்கருமெனது மாப்பிள்ளையுமாகிய கோவிந்த பாரதியாரவர்களது பெருந்துணைகொண்டெழுதிப் பதிப்பித்துள்ளேன். எத்தனையோ பலவுத்தம தர்மங்கள் செய்தவரும் செய்து வருபவரும் முன்னோர் நூற்களை வெளியிட்டுவருவதே தனது கடமையாகக் கொண்டவரும் மதுரை ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வராள் வகையரு தேவஸ்தான டிரஸ்டியுமாகிய உயர்திரு **R. துரைசாமி நாயுடவர்கள்** முன்னரிந்நூலாசிரியரின் திருவிளையாடல் வண்ணத்தையச்சிட்டுதவியதுபோலவே இக் கீர்த்தனை நூலையுமச்சிட்டுதவினார்கள். இவ்வரும் பெருந்துணை புரிந்தபேருபகாரியாகிய மகா-ா-ா-ஸ்ரீ துரைசாமி நாயுடவர்களுக்குப்பேராலவாயான் கிடைத்தற்கரிய பெரும் பேற்றை யளித்தருளுமாறு பெரிதும் பிரார்த்திக்கின்றேன்.

இதிற்காணப்படும் பிழைகளைப் படிப்போர் எனக்குத் தெரிவிப்பாராயின் அவர்களுக்கென், நன்றி தெரிவிப்பதோடு அடுத்த பதிப்பிற்றிருத்தி வெளியிடுகின்றேன். இதுகாறும் எனக்குப் பேரருள் புரிந்த ஆலவாயிறை வனிணையடிகளைப் பன்முறை யிறைஞ்சுகின்றேன்.

இங்ஙனம்,

**P. நடேசபாரதி,** வேம்பத்தூர்.

வேம்பத்தூர், சிலேடைப்புலி பிச்சுவையரவர்கள் குமாரரும்
மதுரைக்கல்லூரி யுபர்தரக்கலாசாலைத் தலைமைத்
தமிழாசிரியருமாகிய பாஸ்கரையர் பாடிய

## சிறப்புப் பாயிரம்.

ஆசிரியப்பா

பூமகள் திலகம் பூமக ணயனம்
பாமகளுறைதளி யாமென நாவலர்
பன்னுஞ் சீர்த்தி மன்னும் முத்துத்
துன்னுஞ் செல்வத் தொன்னகர் மதுரைப்
பதியினிற் கங்கை நதிபணி கொன்றை
மதிபுனை யீச னதிசது ராகப்
பத்தர் முத்தர் நித்தம் வாழ்ந்திடச்
சித்தரா வந்தறு பத்து நான்கு
விளையாட் டயர்ந்ததை விளைபொருண் மக்கள்
அளைமுத லுருகிடக் கிளைசங் கீதக்
கீர்த்தனை யாக வார்த்தன னியாரெனிற்
பார்த்திப ரீந்த கீர்த்தித் தண்டிகைப்
பாவலர் வாழ்வுறு காவலர் பொதுளிய
பாவளம் மிக்க தாவள மார்ந்த
வேம்பத் தூரினி லாம்பன் முகன்பா
தாம்புயம் பணிவோ ராமந் தணர்தங்
குலத்துதித் தேயித் தலத்தர் புகழ்ந்து
சொலத்தான் வந்த நலத்த சிலேடைப்
புலியெனப் பட்ட வலிமிகப் படைத்த
கலிதீர் கவிசெய் சலியா வுளத்தன்
ஐய மேற்பார் கையிற் செம்பொன்
பெய்த பிச்சு வையர் சகோதரன்
அவனிப ராளுஞ்சிவகங் கையிழ்வாழ்
பவன்சின வைத்தித் தவன்பா னன்று
யியலிசை முறையே பயின்றவ னான்பா
லுயவே பக்தி நயமுறக் கொண்டோன்
சர்க்கரை ருசிபோ னற்கவி சொல்லுஞ்
சர்க்கரை பாரதிச் சற்குண னென்போ
னக்கீர்த் தனைகளுட் சொக்கரை மேவிய

முக்கனி யாமளை முக்குணி யான
மங்கையர்க் கரசியா மங்கயற் கண்ணியின்
மங்களத் திருமணந் தங்குகீர்த் தனைகள்
இட்டமா யச்சி லிட்டுத் தந்தா
னெட்டுத் திக்கிலு மெட்டும் புகழோன்
திருமலி செல்வத் திருமங் கலத்துந்
தெருமலி மன்றற் பெரிய குளத்துஞ்
சசியுறு சோலை யுசிலம் பட்டி
வசிபெறு வேலோன் வசிக்கும் பழநி
முதலாந் தலத்து முதலாந் தாத்தில்
நிதமா விருக்கும் விதமக் கட்கு
மாசி னன்மைசெய் தாசில் தாராய்க்
காசி லாசை வாசயில் லாராய்
வதியுங் காலப் பதிகளிற் றக்க
அதிவித மான வதிகள் சாலைகள்
அதிவிரை வினிலே திதியுறச் செய்தும்
புதிதாய்க் கிணறுக ளதிபாய் குளங்கள்
பதிக மிகவே யுதிக்கு நந்தனம்
பதியார் புகழ நிதிதா னளித்துத்
தொட்டு மிறைத்தும் வெட்டச் செய்தும்
கட்டுக் குலைந்த விட்டுணுக் கோவிலைத்
திருத்தியு மப்பா லுருத்திரன் பெற்ற
திருதோட் குமர னிருந்த மலையிலும்
விதுவளர் சோலை மதுமலர் கந்தமார்
சதுர கிரியிலுஞ் சதுரப் படிகள்
செதுக்கியும் பதித்து மொதுக்கில் வெளியிற்
பதுக்கில் விளக்குகள் புதுக்கி வைத்தும்
எத்தனை யோபல வுத்தம தர்மம்
மெத்தச் செய்தவன் சுத்த வுளத்தன்
மற்றுந் திகிரி சுற்றுங் காமார்
முற்று காமம் பற்று மேனிய
மாலின் றுளவக் காலி னன்பன்
வேலினன் பூதியன் பாலிலள்ளிப்
பட்டுப் பையி லிட்டுக் கொடுப்போன்
துட்டரை விட்டுச் சிட்டரை கட்டோன்
இரவலர்க் கீயும் புரவல னெப்பான்

நூலவரைப் பேணுந் தாமறி கருத்தன்
விற்பனர் செய்த பற்பல நூல்களை
அற்புட னேற்றுத் தெற்றென விளங்க
அச்சிற் பதிப்பித் திச்சகத் தோர்க்கே
உச்சித மாக மெச்சக் கொடுப்பதே
கடமை யென்னுங் கடப்பா டுடையோன்
மடமைதீர் சங்கத் திடமார் மதுரைத்
தேவத்தான மாவகை யாரவின்
மாவுத்தியோக மாவுன டிரஸ்டித்
துரைசாமிநாயுடென் றுரைக்கும் பெரிய
வரைவில் புண்ணியன் முறையின்வா ழியவே

## சாற்றுக்கவிகள்.

வேம்பத்தூர், சிலேடைப்புலிபிச்சுவையரவர்கள் மருமகரும்
இந்நூலாசிரியன் மைத்துனருமாகிய கோவிந்தபாரதியார்
பாடிய

### ஆசிரிய விருத்தங்கள்.

1, பூமேவு கயல்கடம் வாலைச் சுழற்றிப்
புடைத்துழுபகட்டை யோட்டிப்
பூகத்தி னெண்பழக் குலைசிதறிடத்தாவு
புனல்வயல்கொ ணிம்பைநகர்வாழ்
தேமேவு செந்தமிழ்க் கலையிலக் கணமெலாந்
தேர்சிலே டைப்புலியெனச்
சேதுகா வலன்மெச்சு பிச்சுபா ரதியொடு
செனித்திடு கனிஷ்டன் விரைவாய்
மாமேவு மாசுகவி மதுரசித் திரகவிகள்
வண்ணங்கள் சொல்லும் வல்லோன்
மன்னர்புகழ் சங்கீத நிபுணசர்க்
கரைராம மறையவன் கீர்த்தனைகளாய்
காமேவு மதுரைமீ னம்பிகை மணத்தினைக்
கழறின னிதற்கொவ்வாமற்
கடலமுத நண்ணியது வெண்ணிற
மெய்யெனிற் கருதுவமை யாதுமுனதோ

2. மாமேவு மறுபத்து நான்குதண் டிகைவித்து
வான்களாய்க் காவி யங்கள்
மன்னுகவி வாணர்கண் மதித்திட
வியற்றியுயர் மகிபரால் வரிசை பெற்று
வளர்சிருங் கேரிவாழ் சங்கரர் மடத்தினும்
மதுரைமா நகரின் மூன்றாள்
வந்ததிருஞானசம் பந்தரின்
மடத்தினும் மருவுநெல்வேலி தன்னிற்
பாமேவு துருவாச முனிவரின்
மடத்தினும் பாவேலைநன்ம டத்தும்
பட்டம்பொருந்துகுரு வாகியுப
தேசங்கள் பண்ணிநற் காசிவரையிற்
பலவூழி யம்பார பரைசெய்த கவிராஜ
பண்டிதரின் மேன்மையுற்றுப்
பாருலகு புகழ்நிம்பையூர்மருவு
சர்க்கரைப்பாவலவ னன்பு கொண்டு
தேமேவு குழலிமீ னாம்பிகை மணத்தினைச்
செப்பினன் கீர்த்த னைகளாய்ச்
சித்தசனை யொத்தவடி வத்தினன்
கற்றவர்கள் சித்தத்தினுக்கு நண்பன்
செங்கணெடு மாலுபய பங்கய
மலர்ப்பதஞ் சேவிக்கு மன்புமிக்கோன்
செப்புபல தர்மங்க ளிப்புவி சிறந்திடச்
செய்தவன் பொறுமை யுள்ளோன்
நாமேவு மினியவச னன்கலைகள்
கற்றவனவி லுமீ னாக்ஷிடிரஸ்டி
நம்புசிவ னடியவர்க் கின்பனாந்
துரைசாமி நாயுடு செம்பொன் மிகவும்
நல்கவச் சிற்பதிப் பித்தனனடே
சபாரதியாவ ருங்களிக்க
நாரியொரு பாகனு மியசுந்த
ரேசனருள் நண்ணிநிதம் வாழ்க மாதோ

சிவமயம்.

# ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேஸ்வராள் திருக்கல்யாணக் கீர்த்தனைகள்.

## காப்பு.

### வெண்பா.

மாமதுரை மீனாக்ஷி வந்தசுந்த ரர்க்குச்செய்
மாமணத்தின் கீர்த்தனை பூ வாழவே—நேமமுடன்
எம்மா நிலத்தவரு மேத்துபா தாரவிந்தக்
கைம்மா முகக்கடவுள் காப்பு.

---

1. இராகம்-சௌராட்டிரம்-தாளம்-ஆதி,

பல்லவி.

சித்திவி நாயகனே சுகவரப்ர
சித்திசெய் தாயகனே (சித்தி)

அனுபல்லவி.

சுத்தநிர்க் குணதூயா துதிசெய்யன்பர்கணேயா
பத்தர்க்க ருள்சகாயா பழமறைதேடு பாயா (சித்தி)

சரணம்.

நத்தியுன்பதயுக ளத்திலன்பு தித்திக்க
நலமதுராபுரேசர் நடத்தும்லீலை விர்த்திக்க

நத்திறகடல்சூழ்ஜ கத்தர் நாவிற் சித்திக்க
நன்மைமிகுந்தன்பென் ஞுனும்ப்ர வர்த்திக்க

முடுகு. நான்சொலும்படிருசித் தமிணலந்தாரும்
நாதாவுனருட்கண்ணு ஞடியேபாரும்
தேன்செய்மதசயிலம் போலென்முன்வாரும்
சிவபுரமதுரைப்பொற் ருமரைக்கரையாரும் (சித்தி)

2. அருணகிரண தேகனே மஹாபல
வனந்தபூத சமுகனே
கருணுரஸப்ரவாகனே யிஷ்ட காம்யார்த்தங்
கருதுமோக்ஷ தியாகனே

முடுகு. கமலசதிர்சபத யுகளநடனசுப
காகளபவதர கனககிரிலிகித
கர்த்தனேபவ பயத்தினையோட்டி
கசிந்திடுமுயர்பக்தி யமுதினையூட்டி
நித்தியானந்த சுகத்தையே பூட்டி
நினைவினினிலைகொள்வாய் நிதம்பரமேட்டி (சித்தி)

2. விருத்தம்.

மாபுவன தலங்கள் சிகாமணியதான மதுரைநகர் வளமதோங்க
நீபவன நிகடமுற்ற சுந்தரர்க்குத் திருப்பணிக ணிலைநந் திடச்செய்
தேபெரியவர்த்தமண்டபங்கள் மஹாமண்டபங்கள் சிறக்கச்செய்து
சோபனவிழாவியற்றி யரசுபுரிந்தனன் மலையத்துவசன்றனே.

3. இராகம்-நாதநாமக்கிரிகை-தாளம்-ஆதி. 2.

(கண்ணிகள்.)

மதுராநகரியைச் சதுரானுன மலையத்துவஜ னரசுசெய்தான்
கதிரார்நவமணி மகுடாதிபவொலி கழலாயென வாழ்த்திக்

கனராஜர்கள் திறை நிரையாகவேகுவி கனகாசல நிகர்வோன்
அனகாயெமனை வெலுமைமீனவன் மகிழதியாவெனப் புகழ்வோன்
சிரகாலமுமகவிலையே யெனமனதினிலே நினைவாகிக்
காளாசனகர வுரகாபரண சங்கரவென்றே துதித்தான்
அரனூர்தளிபல மடம்வாவி கடடமன சாலைகளமைத்தான்

4. இராகம்-காம்போதி-தாளம்-சாப்பு.

பல்லவி.

மறையோர் சொற்கேள்வியாற் பரிமேதவேள்வியை
மலையத்வஜன் செய்தானே

அனுபல்லவி.

குறையாமலுதாத்த வநுதாத்தஸ்வரிதங்
குலவுஞ்சுரந்தெரிந்து குடம்நிறை நெய்சொரிந்து

சரணம்.

அக்ஷதையுஞ் சமித்து மாகுதி யாய்க்கொடுத்து
அஷ்டதிக் குறைவோரை யாவானஞ் செய்தடுத்து
பக்ஷமாகவே யக்னி பகவான் துதிதொடுத்து
பக்தியாய் யாககுண்டப் பக்கத்தினி லடுத்து (மறை)

2 வது

வானமெங்கினும் புகை மண்டியே புதைக்க
மலைச்சிறை யரிந்தவ லாரிமனம் பதைக்க
தானகுண்ட வக்னிப்ர தக்ஷணமாய்ச் சொலிக்கத்
தர்மமெங்குங் கதிக்கச் சகலர்களுந் துதிக்க (மறை)

3 வது

இரவிகுலத்துற்ற சூரசேனன்மகள்
இரதிநிகர் காஞ்சன மாலையுடனே புகழ்
தரணிவாண் மறையோர்கள் தவமாதவர் கூடத்
தக்கவைம்பத்தாறு தேசாதிபருங் கொண்டாட (மறை)

5. விருத்தம்,

சந்தானம்வளர் கனகநாட் டிந்திரனிச் செய்திதனையே யோர்ந்து
நந்தானங்கண மதனிலிம்மக நூறுமுடியி னலியுமென்றே
தந்தானசில வசனம்வழுதி மலயத்துவஜன்பாற் சாற்றவேதான்
வந்தான்றன்னெண்ணமதுநிறைவேறும்படிபுகழ்ந்துவசனிப்பானே

6. இராகம்-ஆரபி-தாளம்-ஆதி.

மண்ணுலகினிற்றர்ம வானுன்போலெவருண்டு
மலயத்வஜ வழுதியே

அனுபல்லவி.

விண்ணுலகுந்துதிக்கப் பண்ணும்பரிமேதத்தை
மேட்டிமைசேர்புத்ரகா மேஷ்டிசெய்வாய்சிரத்தை

சரணம்.

இருமைக்குந்துணைபுத்ர னென்பதுதெரிவாயே
இன்பமகிழ்வாமிஷ்டி யிப்போதேபுரிவாயே
அருமைச்சுந்தரேசன்பொன் னடியிற்பூச்சொரிவாயே
அரசுக்குரியபிள்ளை யடைந்துய்யப்பெறுவாயே

2 வது

தமிழ்வேந்தர்மூவர்களிற் றக்கோர்நின்குலத்தரோ
தர்மபரிபாலனந் தழைத்திடு நலத்தரோ
வும்மைப்போலுயர்ந்த வுறுதிகொள் பலத்தரோ
யுண்மையாகவேஇடை யாதுசஞ்சலத்தரோ.

3 வது

அஷ்டதிக்கினுமிசை யெட்டிவளர்கண்யனே
யாளுர்பரமக்ருபை யகலாதபுண்யனே
இஷ்டாதிமதனு மிறைஞ்சுலாவண்யனே
இந்துவம்சோற்பவனு மந்தரபுயகண்யனே

7. இராகம்-கல்யாணி-தாளம்-சாப்பு.

பல்லவி.

காமேஷ்டி செய்தான் சுபுத்ர காமேஷ்டி

அநுபல்லவி.

ஸ்ரீமான்மலயத்வஜ தென்னவனுந்தேவியுஞ்
செழிக்குமாச்யாகுதி செய்துபொறிதூவியுஞ்

டுரு. க்ஷேமமறையவர் மாமறைமுழங்கத்
தேவதுந்துபி யைந்துமே தழங்கப்
பூமியெங்கினுஞ் சோபன முழங்கப்
புங்கவியவதரித் தெங்குமின்பம்வழங்கக்

சரணம்.

மன்னன்மலயத்வஜன் வலதுபுயமோங்க
மருவலர்க்கெல்லாந்தங்கள் மனதுமிகவுமேங்கப்

பொன்னனையார்புரதம் புகன்றிசையானடிக்கப்
பூமியுள்ளோர்கள்செய் புண்யக்குறைமுடிக்கப்

முடுகு. பூதசேனைகள் நாதனானவர்
போதன்மாலிந்தி ராதிவானவர்
சோதிரவிசசி யாவர்களுமுய்யச்
சுபமதுரையின்மீ னாக்ஷிக்குமணஞ்செய்யக் (காமேஷ்)

2 வது

இரதிநிகர்காஞ்சன மாலைகொங்கைசுறக்க
எனையாள்சுந்தரேசன் மதுராபுரிபுரக்க
விரதயோகிகள்சித்தர் விஞ்சையர்கள்கொண்டாட
வேந்தன்மலையத்வஜன் மேன்மைமகிழ்ச்சிநீட

முடுகு. வேதியர்கள்வே தாகமமொலிக்க
வேதிதனிலக்னி வலஞ்சுற்றிச்சொலிக்கச்
சாதுசர்ச்சனர் தவமெல்லாம்பலிக்கச்
சகலப்ரஜைகளு மனங்குதூகலிக்கக் (காமேஷ்)

8. இராகம்-சவுராட்டிராம்-தாளம்-ஆதி.

பல்லவி.

அவதார மாகியே வந்தாளே வுற்றோர்
அனைவரு மகமகிழ்ந் திடக்கண்காக்ஷி தந்தாளே

அநுபல்லவி.

பவபாசமனி யாம்பரஞ்சோதி பாசுதர சங்கரனுள மகிழ்நீதி
புவனவகில சராசரமெ லாங்க்யாதி பொருந்தவே பெற்றா
ளயனரியார்க்கு மேயாதி

சரணம்.

சூழியஞ்சேருஞ் சிறுகொண்டை சசிகளங்கஞ்
சூழுமுத்தாரம் ப்ரபைகண்டை நேருங்குதலை
வாழியமுத மாரந்தண்டை நூபுரவொலி
வாழ்த்தக் கயிலைவளர் பண்டையரன் றனிக்கப்

முடுகு.

பங்கஜபானுவொளி மங்கச்செயும் பவளமாலை யிழையாயிரம்
பொன்கள்பெறும்படி யிலங்குமேகலை யிடைச்சேலை யிரவினிலும்
பொங்குகிரண மிகவ லங்க்ருத குண்டலவோலை யெழிலோங்கிய
துங்கமுயர் சுபகரங்குலவி யேவரும் வாலைமனோன் மணியாம்

முடுகு.

முத்துவட மொத்திலகு பத்திகொள மொய்த்தசிறு நகையாண் முறையிட்டோர்க்குக்
கைத்தலம் விரித்தஞ்ச லுரைத்திடு மகுத்வமிகு தகையாண் சதாகாலமுஞ்
சித்தர்பரி சுத்தர்மன மத்திவளர் தத்வமறைச் சிகையா ளஷ்ட திக்காளுங்
கர்த்தர்களை யுத்தமுகத் தெய்த்திடவே பத்திவிடும் பகையாள் கிருபாவாரிதி
மோனமுத்தணி ஜெகமோகி த்ரிசூலி முயன்றுதர்மஞ் செய்யடி யார்க்கனுகூலி
தீனஜனரக்ஷகி யாம்பரிபாலி திகையாமலெனை யிகபாத்தும் ரக்ஷிக் குஞ்சீலி

2 வது

செப்பும்வயது மூன்றேயாகிச் சிறந்தொளிசெய்தே சோமயமதான தேகி செழியர்குலத்
திற்குப்புகழ் கொடுத்தத்யாகி ஜெஜன்மித்தாளென்று

தேவர்துதி சுகப்ரவாகி வந்தவம்சத்தைத்
தேர்ந்துசந்திரன் களிகூர்ந்துமன மகிழ்துன்ன மதுரையுள்ளோர்
சேர்ந்துமீன வண்முன்னே நேர்ந்துநீதானோ வவளென்னப் பெண்
கனெல்லாருஞ்
ஜெகஜெனனி வழுதிமகளாய் வந்தாளென் றுரைபன்ன மிகுசம்
பன்ன
பாக்யசாலி காஞ்சனமாலை மடியிற்பதிந் திருக்கிறள் வந்துதெரிசித்
தாளேடியில்
நோக்கினு லிந்திராதியர் முடிகொள் நுவலவொண் ணுதவாழ்வு தரு
வாளிந்தப்படியில்

3 வது

மந்தஹாஸ முறுவல்பூத்துக் காஞ்சனமாலை
மகிழப்புத்ர சோகத்தைத்தீர்த்துக் கடைக்கண்கொண்டு
தந்தைதாயரை மெல்லப்பார்த்துத் தழைமழலைத்
தண்ணமுதந் தாய்செவிவார்த்து லாவண்யாம்புதி

முடுகு.

தனில்வருந் திருவிவளெனவனை புளகிதங்கொள்ளச் சார்ந்தவரெல்
லாந்
தவமகமகிமை யிதெனவழுதி முனுரைவிள்ளத் தனித்தனியாய்த்
தகைமிகுமாசர்கள் தமைத்தமையிகழ்ந் துமேயெள்ளத்தானநிதிகள்
சதுர்மறையவர் புலவோர் கண்முகந்து முகந்தள்ள விந்தப்படிக்கிச்
சந்த்ரகலாதர ராகியவேணி சங்கரன்மகிழொரு பங்குறைராணி
அந்தமிதுமதுரா புரிகாணியாக்ஷி செயக்காஞ்சனமாலை தவத்தைப்
பேணி (அவதார

9. கண்ணிகள்.

இதற்கோ புத்ரகாமேஷ்டி இயற்றினே னே (இத)
ஈதற்கேயாசைமிகுந்து ஜோலிதீயினெய்சொரிந்து (இத)

வாடிமனந் திகைக்க மாற்றலர்க ணகைக்க (இத)

முயன்று தவமுற்றேன் மூன்றுமுலைப் பெண்பெற்றேன் (இத)

எவ்விதத்தினி லுய்வேனிக பரத்துமென் செய்வேன் (இத)

10 விருத்தம்.

குலமனை காஞ்சனமாலை தவத்துமையா ளவதரித்தகொள்கைதேரு
துலமுறுதோள் வழுதியுள முடையுமெல்லை யசரீரியுரைக்கு மன்னு
நலமகட்கு நகிலமொன்று மறையும் வரனணுகிலந் தநயர்க்குச்
செய்யும்
பலவிதியும் புரிந்துதடா தகைப்பெயரிட் டெழில்செய் யிசைபரவு
வாயே.

11 இராகம்-சகாணு-தாளம்-சாப்பு.

பல்லவி.

மாமகள்வாழ்பதி யாமரண்மனைதனில்
மலையத்வஜ னூற்றுனே

அனுபல்லவி.

நேமமறை யோர்க்கெல்லா நிதிவருஷங்கள் பெய்து
நித்யமங்களசுப வர்த்தனை வேள்விசெய்து

சரணம்.

பூதலத்தினிலிந்த்ர னிவனெனவேசகல
புவனங்களுந் துதிக்க வெகுபெரியோர்
சாதுசற்சனர் விருத்தர் மாதவர் மறையோர்கள்
சகலரு மாசீர் வதிக்க

முடுகு.

சாதநாமகர்மங்களும் புரிந்து சகலக்ரியைகளுமியற்றிப்பொன்
சொரிந்து
நீதிமனுவழி யாவையு முவந்து நிருபன்புண்ணியமா நிலையெலாந்
தெரிந்து

2 வது

சங்கரிநாமந் தடாதகை யென்றழைத்துச் சகலவாசர்கட்கும்
வரிசை செய்தேவுய்த்து
சிங்கார நவரஸக் கவிவாணர்களை மெய்த்துச்
செய்யுமவர் பனுவல்செவிக் குணவாகத் துய்த்துத்

முடுகு.

திகழ்கனதன நற்பணிகளுங் கொடுத்துச்
சிவிகைதனி லவரவர்களை விடுத்துச்
சுகவிசை ரஸங்களிரு செவிமடுத்துச்
சுமதிமந்திரி யொடு மரியணை யடுத்து (மாமகள்)

3 வது

தேசதேசராஜர் திறைகள் பொக்கிஷஞ் சேர்த்துத்
தினையளவு முலகிற் றீனமில்லாமற் காத்து
மாதமும்மாரி வழங்கிட மகிழ் பூத்து
மருவலர் பலங்களை வணங்கும்படிக் குத்தீர்த்து

முடுகு.

மடதடாலய ப்ரதிட்டைக ளமைத்து
மறைசொல் மனுமுறை வழுவிடாதுய்த்து
நடனவாசிவன் றனைமனத்தில் வைத்து
நாளுமவனடியாரை மிகமெய்த்து (மாமகள்)

12 இராகம்-பூரி கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

விளையாடினாள்வெகு விந்தையாக விந்தலோக
மந்தரமெந்த லோகமும் பெறுஜெக தம்பிகை

அனுபல்லவி.

குளாம்ருத மதுரிதமழலையோங்கி கோமளமரகத சதிர்சாங்கி
குலவிடுவெகுவித விகுளையர்பணியவே குருமதிநுதலமிசை கொள
வரு திரிபுரை

சரணம்.

சிறியவீடுண்டாக்கிச் சிற்றில்மணச்சோறாக்கி
யுறவர்க்குண்ணென்றுதேக்கி யுரைத்தெங்கள்மீனாக்ஷி

முடுகு.

யுளமகிழ்தரு குகனுண்டிடாத முலையூட்டிப்
பாவைக்குச் சாலங்காட்டி யென் கண்ணிமலை (விளை)

2 வது

தந்தைதாயர்கண்டு சிந்தைமகிழ்ச்சிபொங்கச்
சந்ததமதுரையில் விந்தைவந்துதங்க
வந்தாங்கவடியார்க் கருள்செயுந்துங்க
வரசொருகுடையினி லாக்ஷிசெய்துவிளங்க
வழகொழுகிய பருவமதுர நவமணி
யரியணைமுதுகுறு மாதியென்னம்மணி (விளை)

13, விருத்தம்.

சீமன்மலையத்துவஜ மாவழுதி புத்ரிமிகு தீரநிறை வித்தைபருவம்
மாவழகனைத்தினையுமேமனதி லுற்றரசு மாதுசெய வைத்துமகிழும்
நேமகமனத்திலெணியே நிருபருக்கிதனை நீயெழுதெனச் சுமதியும்
க்ஷேமசமூகூர்த்த தினமானதெழுத ப்ரபலதீரர் மதுரைக்குறவரே.

14. இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

மாமதுரை மீனாக்ஷி மகுடம் புனையும்காக்ஷி
மகிழ்வாய்க் காண வந்தாரே

அனுபல்லவி.

தாமவலங்கிர்த கிரீடாதிபர்களுஞ்
சதுர்மறை யாகம சாஸ்த்ர நிபுணர்களும்

சரணம்.

பூமிபுகழ் மலையத்வஜ பாண்டிய மன்னவன்
புஜபலவரசிற் பொருந்தி வளர் முன்னவன்
நேமிதரன் செய்புண்ய நிமலக்ரீடந் தரித்து
நிகிலலோக முங்காக்கு நிச்சயமென் றுரைத்து

முடுகு.

நெஞ்சமதனின் மகிழ்மிஞ்சி யுடல்புளகி
தஞ்சொலித்திட வபாஞ்சி ராஜேஸ்வரி

2 வது

தூரகஞ்சிவிகை ரதந்துவஜம் பரிவாரங்கள்
சூழவதிவிரை வாய்ச்சுபரக ரடைவாருங்
காரகமலமுகிழ்த்துக் கனகவங்கங் கம்பித்துக்
கனிந்துபக்தி யிருத்துக் கசிந்துருகிக் கதித்துக்

முடுகு.

கமழுமலர்கணிறை பொழில்கண திகண்மலை
களையெல்லாங்கடந்து கனவிரைவாய்நடந்து

3 வது

கோடியாதவரொளி நீடி யஷ்டாங்கமாய்க்
குலவுவிமானமுங் கோபுரமுந் துவஜமுஞ்
சேடுயர் ஸ்தூபிகளுந் திருமதில்களுங்கண்டு
த்யானமோனங்கொண்டு தெரிசித்துத் துதிவிண்டு

முடுகு.

சிவசிவதிரிபுரை யொருபர மதிலுறை
ஜெயவிஜயவெனவே க்ஷேமவுரை துன்னவே (மா)

15. விருத்தம்.

தமணியநவமணி மகுடமதனை மதசயிலப் பிடரேற்றிக்
கமலைமகள் குடிகொள் ரமணிய மதுரைக் கடிநகர் சூழ்வித்து
விமலபுனித வரசுரநதி தனில்வரு வெகுபுனன் முழுகாட்டி
அமரர்கண் மலர்மழைபெய வேள்விகள் செய்தனை முடிசூடினளே.

16. இராகம்-அடாணு-தாளம்-ஆதி.

பல்லவி.

புனைந்தாள் மணி மகுடம் பரி
பூரணிதிரு புவனகாரணி தடாதகை

அனுபல்லவி.

நினைந்துதுதி செயன்பர் நெஞ்சுறை ஸாக்ஷி
நிகிலபுவ னங்களும் நிறைந் திடுங்காக்ஷி
நிர்மலைமா மதுராபுரி யாக்ஷி
நிச்சைய மொடுசெய விச்சைமிகு மீனாக்ஷி

சரணம்.

வாஸவாதி ரிஷிகேச னயன்முதலாய் மகிழ்ந்து வந்துகூடக் கமழ்
வாரிஜமுறையும் ரமாவாணிசசியும் வந்து மங்களம் பாடத்
தாஸர்கண்மகிழ்நீடத் திலோத்தமை ரம்பை நடமாட—செக
தலங்கள் பிலங்கள் வானுலகங்களி லுள்ளோரான
சகலர்களுங் கொண்டாடச் சாமரை பெண்கள்போடப் (புனைந்)

2 வது

தாளமேளமொ டெக்காளம் பூரிசங்கந்தமதமவெனமுழங்க, வன்ன
தானம்பூ தானங்கோ தானஞ்சொர்ன்ன தானமளவில் லாமல்
வழங்கச்
சாஸ்த்ரவே தந்தழங்க ப்ரபைசந்தா வம்சம்விளங்கக், குளிர்
சலசவதனி கடசதிர்சமுத் தனிசிவசாம்பவி கயல்விழியாம்பவானி
சிரமேற் (புனைந்)

3 வது

மங்களநவ ரஸவிங்கித மிருகவி வாணர்கணிறை சங்கங், கனி
மாதுரிய வசன சாதுரிய மொடுசெய் மகிமைப்ர சங்கஞ்
சங்கரியரசங்கம் போலவே சம்ப்ரமவாடங்கம், மிசை
சதிராகவேயுரை யெதிராரிலையென மதுராபுரியுள்ளோ ரதிராவுரை
தரப் (புனை)

17. இராகஞ்-சாவேரி-தாளம்-ஆதி.

பல்லவி.

இராஜேஸ்வரி மீனாக்ஷி ரத்னவிம் மாஸனாக்ஷி
ராஜரீகஞ் செய்தாளே

அநுபல்லவி.

தோஜோமயசீதளத் திங்கட்குடைநிழற்ற
திளமுதெனப்பாணர் திகழ்யாழிசைமிழற்றத்

முடுகு:

தேவதுந்துபி யையர்துமுழங்கச் சேணருந்தவர் பூமழைபொங்கக்
காவிருந்துலகாக்ஷி செய்துங்கக் காவலன்பணி செய்துவிளங்கப் (பு)

சரணம்,

பஞ்சபஞ்சவுஷக் காலத்துயில் விழித்துப்
பனிமாமணஞ் செறிபாணி தனிற்குளித்து
நெஞ்சம் பரிவாய் நித்ய—தானஞ்செய்நீர் தெளித்து
நேசமிகு மாத்ம பூஜைசெய் தெக்களித்து.

முடுகு.

நிறையறவோர் பெரியோரொடு கூடி
நீபவனத்தான் றிருமுடி சூடி
மறையறியா யெனவே துதிபாடி
வணங்கிக் கயல்விழிதன் மருத்வ மிகக்கொண்டாடி

முடுகு.

மாளிகை நிறையரண் மனைதனில் வந்து
மணிமய வரியணை—யேறியுவந்து
கேளிவிலாஸ மதாக விருந்து
கெண்ய புண்யலாவண்யமும் பொருந்தும் (இராஜே)

2-வது

கமலினி யனிந்திதை கனிவோடிருபுறமும்
கடலலைபோற் சாமரை யிரட்டவும் நிறை
விமலவெண் மலராளுஞ் செம்மலராளும்
விளங்கு மேவற் செய்தேகிட்டவும் மிகச்
சுமுகமுடனே பொன்னிச்சோழன் சேரன்முதற்
றுரைமன்னர் வாய்பொத்திக் கைகட்டவும் மறு
சமய மறையாகம மொடுகலைக்ஞான
சாஸ்த்ரந் தெரிந்தோர்கள் தன்சன்னிதானம்
அமர்ந்திட வேயவர் பாலபிமான
மகன்றிடாள வளுக்கவளே சமானம் (இராஜே)

3-வது

மடதடாலய ப்ரதிஷ்டைக ளமைத்து
மநுமுறை வழிசற்றும் வழுவிடா துய்த்து
திடவித்வ ஜர்மகிழச்செய்து மவரை மெய்த்துச்
செவிக்குண வாயவர்கள் செய்யும் பனுவற்றுய்த்துப்

தெரிசனஞ் செய்ய வருமரசர்கள் கூட்டத்
தினைக்கஞ்சுகிமாக் கணின்றுமே காட்ட
வரிசையாசர் கடந்திறைகளிதேஷ்ட
மாகப்பொக்கிஷந்தனின் மகிழ்வுடனீட்ட

4-வது

தன்னது சத்திபெற்ற முத்தேவர் முத்தொழிலுஞ்
சரியாய் நடத்தவண்டந்தனை யாண்டவளெஃழிலும்
மன்னுமலையத்வ ஜன்மகளா யெவ்வுலகிலும்
மகிமை மிகுவாலம் மல்கு நீபப் பொழிலுங்
கன்னியாம் பருவந்தன்னிலே யாண்ட
காரணத்தான் மணிமாடங்கணீண்ட
பொன்னகரங் கனிநாடுபேர் பூண்ட
புதுமைகண்டரசர்கள் துதிசெய்துவேண்ட
(இராஜேஸ்வரி மீனாக்ஷி)

18 விருத்தம்

தொழுதகையினர் துதித்த நாவினர்துளும் பிடக்கமல விழியினீர்
ஒழுகநெக்கு நெக்குரு குளத்தினர்களோய்விலாத தவவுறுதியோர்
வழுதிதன்புதல்வியென மதங்கியுமை வந்தகாரணமதேதெனப்
பழுதிலாமுனிவர் வினவுவார் பொதிகைப் பருப்பதத்தினிட
முணரவே

19. (இராகங் கானடா தாளம் ஏகம்)

பல்லவி.

ஏதுகாரண மோதுவீரையா

அனுபல்லவி.

வேதமுதல்வியே மீனவன்மகளான (ஏது)

சரணம்.

தவமாமலையே தர்மநிலையே
சிவஸாம்பவிதான் றென்னன்மகளாகிய (வேத)

2-வது

பொதிகாசலம்வாழ் புண்ணிய மூர்த்தியே
கதியேதருஞ்சங் கதியேதெரிந்திட (வேத)

3-வது

இன்ப மகிழ்மீற வெமதுளந்தேற
துன்பவினைதீரச் சொல்வீர்கடைத்தேற (வேத)

20. இராகம்-தருபார்-தாளம்-ஆதி.

பல்லவி.

முழுதுமுலகீன்றவள் வழுதிமகளாங்கதை
மொழிவேன் கேளு முனிவரே

அனுபல்லவி.

செழுமறையாகமர் தேரும்ப்ரசித்தரே
சிவபத்தியினிபுண தீரமிகுஞ்சித்தரே

1 வது சரணம்.

எழுசுரவிஞ்சையன் விச்சாவஸுமகளாகி
யேபிறந்தாள்விச்சா வதியாமதிவிவேகி
பழுதிலாதவுமை பத்தியுடையதேகி
பரமபிதாவிடம் பகர்வானறிவுண்டாகி

முடுகு.

பரைதனை வழிபடு செயலெது பவவினைப்
படலம கலவழி பகரென வுரைதரு
பவண்மன மகிழ்வுறு படியுமை மந்த்ரச
பமதுசெய் யெனவுமே பழகின னதின்மிக (முழுதுல)

2 வது

அத்தகௌரி மந்தாஞ் சித்திசெயுந் தலமொன்
றறைகுவாய் நீயெனவே தவ
முத்தர் சித்தர் தேவர்க ணத்திருந்து வாதசாந்தம்
முதன்மை பயில்வாய் மன்னவே சக
கர்த்தன் கதிர்சேரு மருத்வவான் சுருமதி
களிப்புடனு முன்னவே
முத்திசாத நம்பெறும் பத்தியுடை யான்வந்து
முயன்று தவசு துன்னவே

முடுகு.

எற்பகலூ ணிலையெட் பொடியுண்டு
மெழிலுறு சாந்த்ரா யணமொடு மண்டும்
பிற்பகலான் பஞ்சகவ்வியங் கொண்டும்
பால்சுத்த ஜெலந்தருப்பை நுனிநீருண்டும்
பலகால்கால்கொடு பட்டினியுற்றும்
பழகியபலதவ மகிமைகள் பெற்றும் (முழுதுல)

3 வது சரணம்.

தொடரும்பன் னீரண்டாஞ் சுருமதிகோ விற்சென்று
துணைமாந்தனி ரடிமேகலை யிடையாளொன்று
மடநூல்புகாத பாரதனத்தாய் வளைகடுன்று
வடிவார்காந் தளங்கை மங்கல களத்தாயென்று

முடுகு.

மமைகலை நிறைமதி முகியளி சுழல்குழல்
அவிர்கயல் விழியென யாழிசை செயுமவ
ளகமகிழ் வுறுவா மதுதர் வினவென
வினைநீயென் மகவுறு வவதரி யெனவுமே
யறைகுவான் மலையத்வஜன் மனைநீயா
யமைகுவாய் வருநற்சன்ம மதிலுன்
அவனியான் தவபுத்ரி யாயுறுவனென்
றருமை யாய்மொழி சொற்றனள் புவிமேல் (முழுதுல)

21. விருத்தம்.

திக்கடங்கச் சந்த்ரவட்டக் குடைநிழற்றி யாசரிமைச் செங்கோல் கைக்கொண்டு
முக்கடங்கணிகர் தகபாரங்கள் பொரு திடைதுவள முருகார்கூந்த
லுக்கடங்கார்வணங்க வனைமகட்குமண முறுவதெப்போதுள தென் றேசிங்
திக்கடங்கா வொலித்திடயான் றிசைவெல்வே னெனவுரைத்துச் செல்குவாளே.

22. இராகம்-பைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

தடாதகை யென்னம்மணி, தமிழ்மாறன் கண்மணி
சயங்குறித் தெழுந்தாளே

அனுபல்லவி.

விடாதஷ்ட திக்குள்ளோரை வெருவும்படி செயித்து
மீனத்வஜனெனிய விடையோன் வந்துற்பவித்து

விரைசெறி மணமாலிகை வந்துசூட
மேன்மை மதுரைநகரார் மகிழ்நீடத்
திரைசெறி ஞாலங்கள் க்ஷேமவிசேடஞ்
சிந்தித்த போகமோக்ஷம் யாவுங்கைகூடத் (தடா)

சரணம்.

கெஜதுரக கர்ச்சனை கிடுகிடென் றேயதிரக்
கெம்பீரவாட் கைமாதர் கிளரொளிவாள்விதிரப்
புஜபல வாசர்கண் மந்திரிசயி னியஞ்சூழப்
பொற்றேர்ப் பாரங்கள் சேடன்பொருந்து சிரநிமிரப்

முடுகு.

பூரிசங்கம் ரணபேரி சங்கந் தொனிக்கப்
பூர்ணச்சந்த்ர வட்டக் குடைபுவியைக் கணிக்க
வாரியொலி யடக்கி மாக்கள் செவிதணிக்க
வடகுடதிசை யுள்ளோர் மருண்டுமே கவனிக்கத் (தடா)

2 வது

சந்த்ராஸ்த்ரம் வருணாஸ்த்ரம் நாராயணாஸ்த்ரம்
சதுமுகனஸ்த்ரம் எங்கள்சாம்பன் பாசுபதாஸ்த்ரம்
இந்த்ராஸ்த்ரங் குபேரனெழில் வருணவாயு வாஸ்த்ரம்
இவர்களஸ்த்ர மெலல்ாமிலங்கும் படிசேர்த்து

முடுகு.

இறுக்கி முதுகுற வம்புகொள் தூணி
யெதிர்த்த வம்பர்கள் தம்முள நாணி
நொறுக்குறும்படி நோன்மைகள் பேணி
நடக்குபூண்கதை பொன்றிகழ்பாணித் (தடாதகை)

3 வது

கடகரி கடலாகக் கந்துக மலையாகச்
அடரும் வாட்பலகை மீனமை யாக
குடைகவரி மிதக்குங் குமிழி நுரைகளாக
குலவுத்வஜ ரதங்கள் கலனாகப்
படைக்கடன் மேலேபரி பூர்ணகடாக்ஷி
பள்ளிகொள் ளும்பத்ம நாயனிகர் மீனாக்ஷி

முடுகு.

பச்சைமா மலையதைச் சொலுமேனி
பாஞ்சசன் யங்கையிலா றும்பவானி
இச்சை யானவைக ளீந்திடு மோனி
யென்னு ளத்தென்று மிருந்தரு ளபிமானி (தடாதகை)

23. விருத்தம்.

கன்றெடுத்துக்கனியுகுத்தோன் களித்திடுதங்கச்சி திசைகடுகிவந்து
நின்றெதிர்த்துக்கயபதி யிந்திரன்வருணன் முதலானோர்நிகடம்
வென்று
சென்றெதிர்த்தோர் செருக்கவர்கள் செல்வமெலாங் கொள்ளை
யிட்டுஞ் செயங்கைக்கொண்டும்
அன்றெடுத்தோ ராக்கனலைவுறுங் கயிலைமலையை வளைந்தமர்
செய்வாளே

இராகம் கல்யாணி தாளம் ஆதி.

24 பல்லவி.

போர்புரிந்தனளே ஜெகதம்பிகை

அனுபல்லவி.

கூர்மிகுங் கணைவாள் கார்முகமரிவாள்
கொற்றமார் சூலமுங்கொண்டு வெற்றிவிஜயங்கள்மண்டு

சரணம்.

பிண்டிபாலதோ மரங்கள் தண்டுமுசலங்கப்பணம்
பெலமிகும் வாட்படைக் குலம்வீசியே வுற்றோர்
மண்டையுடல் துண்டு துண்டுகண்ட கண்டமாகிடவே
அண்டபகிரண்டமும் வெருண்டு பயங்கொண்டிடவே
(போர்புரி)

2-வது

காவல்செய் பூதகணங்களாவென விரைந்து, நந்தி
காவலன்பாற் சென்றெங்களைக் காவெனச்சொல்ல நந்தி
தேவனெங்கள் சிவன் செயலாவதை நினைந்துவருந்
தென்னன்மகள் போர்க்கிளைத்துக் குன்னியேமெல்ல
ஆவுறுபரனுரிடங் காவலனந்தி புகலத்
தேவன் வந்தெதிரிலுமை சேவகங் கண்டிடவல்ல (போர்புரி)

3-வது

கஜபதிமுதலானவதி ரதர்சமரதர் கிடுகிடெனநடுங்கவே
ஜயங்கொண்டு, திறற்
புஜபலவரசர் கணிதிகள் துவஜங்களோடு
பொருந்திய பொருளெல்லாங் கவர்ந்து பண்டு
வசமொடு நடந்திடா மன்னரஷ்டதிக்குள் ளோர்
வலிகளடக்கித் திறைகப்ப முங்கொண்டு விஷப்
புஜகபூஷண வான்கயிலை மலையையுற்றுப்
பொருக்கெனவே வளைத்துநெருக்கி யுத்தம்விளைத்துப் (போ)

25. விருத்தம்.

பொன்போ லொளிசெய் புரிசடையும் புயங்கப்பூணும் புலியுடையும்
மின்போலொளிருந் திருமேனிமீதிற் பூதிவெண்ணூலுந்
தன்போற்கையி லொருமானுந் தழைக்குங்கருணைத் திருநோக்கும்
அன்பாய்ப்பார்த்தே யுமையானை யன்னை தடாதகையும் பார்த்தாள்.

26. விருத்தம்.

தமதிறை புகன்மொழி செவியுறவே யொருதனமது தான்மறையச்
சுமதியுமனையுமை மணமலரணி தருசுமுக ரெனச்சொலவே
வுமைதலை குனிவுற விழிபுற வடியுற வுயர்விரல் புவியுறவே
யமைகுவ மதுரையின் மணமதிவார முன்னம்பதி யேகென்றான்.

27. இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

பல்லவி.

கயிலாஸபதி சொற்கேட் டொயிலாய் மதுரைநாடிக்
கயல்விழி யுற்றாளே

அனுபல்லவி.

புயலார்பொழின் மலைகள்கயலார் நதிதுலைகள்
பொருந்தனந்த நாடுகள் தாண்டிப் புரந்திடுந்தன் மாபதியீண்டி

சரணம்

இரதகஜதுரக வதிரதர் சமரத
ரீறுகொன் ளிடையின்றி—யெங்கள்
மரகதவலி தடாதகை யுறைரதமதை
வளைவுறவே தான்றிச்

முடுகு.

காதமறை புகழுமுமை பணிசெய்யத்
தர்மஸம்வர்த்தனி தயைய பெற்றுமே வுய்ய
வாகமணியு முரசொலி மிகுதய்ய
வும்பர்கள்தொழும் விரையம் பதச்செய்ய (கயிலா)

2 வது

அங்கவங்க முதலாகிய தேசத்
தாசர்களடி வணங்கிச்—செக
தம்பிகையே வினைநம்பினங் காவென்
றடியுறை வைத்திணங்கிச்

முடுகு.

சங்கரி விடைகொடு துங்கர்கள் போக
சாம்பவி ரதமதி வேகமொ டேக
மங்கள வாழ்வுயர் பொங்கும் வைபோக
மாமதுராபுரி நாடியன் பாகக் (கைலாஸபதி)

3வது சரணம்

சதுமறையோர்தவ சித்தர்கள்முதலான
சகலர்களுந் துதித்துச்—சிவ
சங்கரியாம்பரையே க்ருபைசெய்குவை
சரணமெனக்கதித்துக்

முடுகு

குதுகுலமொடுசிவை யேயெனச்சொற்றுக்
கோகனகப்பத மாதருள்பெற்று
விதுகுலமணியென வேமனம்பற்று
மேவிடுவோர்சொலக் கயல்விழியுற்றுக் (கயிலா)

28 விருத்தம்

எண்டிசையோரையுஞ்செயித்துத்தனதுகொற்றவிசைசிறுத்தியிரத மூர்த்தி
திண்டிமர்தடாரிபம்பைமுழவமொக்கைதவிசயபேரிதிரண்டொலிக்கக்

கண்டினியவமுதமொழிக்கயல்விழிதன்கன்னிபுரங்கடுகிப்பெண்கள்
மண்டியமார்த்திடவஷ்டமங்கலவாலத்திசுற்றவந்தாற்ருளே.

29 இலாவணி தரு. ராகம்-ப்யாக்—தாளம்-ஆதி.

அன்னைராஜேஸ்வரிமணமுரசடித்தார்
அன்பர்கள் துதிபடித்தார்
கன்னியரியலுறவணியணிந்தார் நகர்
கனவெழில் செயத்துணிந்தார்
மாலைசாந்தக்குப்பைகள்கூட்டிவாரியேயெறிந்தார்
ம்ருகமதகளபபன்னீரொடுகுங்குமம்வாசலெலாஞ்சொரிந்தார்
மாதர்கண்மைந்தர்கண்மாறன்மகண்மணம்
மகிழ்வாற்றனைமறந்தே
காதணிகுழைதொடிகழல்வதுகனவிலுங்
கருதார்மகிழ்சிறந்தே
சுபமண மென்றெனக் கேட்போர்க் குயர்வுறு
சோமவார மென்பார்
தபமிக வுடையோ ராமெனவே சொலித்
தங்களைத் தழுவிடுவார்
மதிற்புறம் வெண்சாந் திட்டேபூசி
வர்ணனைகள் புரிவார்
சதுக்கம்வீதி கவலைக டன்னிற்
றம்பவிளக் கிடுவார்
நீண்டிடு மாவணவீதிக ளெல்லாம்
நெடும்பந் தலிடுவார்
செண்டொடு வாழை கமுகு கன்னற்
றென்னைகளு நடுவார்
சித்தமகிழ்வி னொடுமுத்து நவமணிகள்
சிங்காரஞ்செய் வாரெங்கள்

நித்யகல்யாணி தடாதகை திருமணம்
நிச்சய மென்றிடுவார்
நவமணியெனக் கண்ணாடி கண்மாடத்தில்
நலமுறத் தூக்கிடுவார்
தபனனெழு பரிமேலடிபடக் கொடிநிரை
தகையுற வேநடுவார்
பூவொடு பனிநீர் பொறிபொற் சுண்ணம்
புரமெலாம் வீசிடுவா ரெழிற்
பாவை விளக்கொடு பூச்சரங் கட்டியே
பயனுறத் தூக்கிடுவார்

30 இராகம்-தோடி-தாளஞ்-சாப்பு

பல்லவி.

வேள்விமண்டபஞ் செய்தார் வெகுவிதான

அனுபல்லவி.

நீளுங்கயிலையா ளனுந்தடாதகை
நித்யகல்யாணம குத்வவிசித்திரமிகு

சரணம்.

மருத்துவன் றன்னைச் செயித்துக் கொணர்ந்த வி
மானநிரைகளென்ன மலைக்குலங்கள்
அருத்தியோடுத்தம திறைமகன் மணத்தினுக்
கணுகியகாக்ஷிதன்ன தேர் நிரைசெய்து

முடுகு.

பொருத்தியேழுயர் பனிக்கிச்சிகரிகள்
புதுமைமிகுமிர்த்ர நீலத்தால்வரிகள்

திருத்தும்யாளிக ணிருத்தும்பாவைகள்
தெற்றிகடோறுங்கட்டி முத்துமேற்கட்டிகட்டி (வேள்)

2 வது சரணம்.

மரகதச் சுவர்களிற் பளிங்குகளாற் சாலங்கள்
வைத்தாயி ரக்கானட்டு வர்னப்பொம் மைகளிட்டுப்
புரந்தா நீலத்தாற் போதிகைக ளும்விட்டுப்
பொன்னுத் திரங்கள்பூட்டி புகழையே நிலைகாட்டி

முடுகு:

புதுமையாகிய மாணிக்கத்தாலே
போதிகைகள்வைத் தியற்றிய தன்மேலே
விதுவனந்தம்வந் துற்றிருந்தாற்போலே
விகசிதசுந்தா சந்த்ரகாந்தத்தாலே (வேள்)

3 வது சரணம்.

முத்தினாற்பாளைகள் பவளத்தாற்பழக்குலை
மொய்த்தெழில்கொண் மரகதத்தினாலிலை
யெத்திசைராஜர்க்கு மிருக்குமிடங்கள்கூட்டி
யிலகுகமுகுவாழை யெழில்பெறவேநாட்டி
யிந்த்ரனரியயன் சந்த்ரன்முதற்றேவர்
இணைகொள்ளரியணையெக்ஞகுண்டமுமிணை

31 இராகஞ்-சாவேரி-தாளஞ்-சாப்பு

பல்லவி.

கல்யாணவலங்காரம் பூணுங்கோலங்
காணவிந்திரன் போற்கண்கள்வேணும்

அனுபல்லவி.

நல்லார்பயில் கயிலைநாத ளுகியபுண்ய
நன்பர்க்களளகையர் கோனுலேமிகுலாவண்ய

சரணம்.

திக்காம்பரந்தள்ளித் திகழ்பீதாம்பரஞ்சாத்தி
தேஜோமயமேனியிற் சிறந்தகோவணஞ்சாத்தி
மெய்க்குடையிலரைஞாண் விளங்கும்படிசாத்தி
விமலமலர்க்குஞ்சியின் விகசிதமொடுசாத்தி

முடுகு.

மொய்க்குமளிகொண் மந்தாரமலர்த்தொடை
முடிச்சிகையின்மிசை முடித்தழகுபடை
மெய்க்கும்ருகமதம் பூசிக்காதிடை
விளங்குகுண்டல மிட்டழகுபடை (கல்யாண)

2 வது சரணம்.

சிறதெய்வந்தொழுவோர் மனம்போலிருட்களஞ்
சேரப்பூர்ணச்சந்த்ர வாரமிட்டேவளம்
திறைமலையருவிபோ லெக்ஞோபவீதமிட்டு
திசாபதியமுதென வாரமிட்டு

முடுகு.

திமலனைப் பாற்கடன் முனைரவி யெனவ
ணேகவ லங்காரஞ் செய்தெழில் கொண்வ
தமனியவ ளைத்தோட் கங்கணமிட் டுத்தவந்
தழைத்திடுங் குபேரன் றனதன்பு பாவக் (கல்யாண)

3 வது சரணம்.

கரியகரித் தோனீத்துத் தரியஞ்சாத் திக்கீர்த்தி
கடத்தமந்த்ர பவித்ரம் விரற்சேர்த்துச் சேர்த்தி
யரியகௌபீன மேல்வரிந்து வஸ்த்திரங்கட்டி
யழகுமிக வேகாட்டி

முடுகு.

விரிதலை நாகம்போன் முன்கொடுக் குவிட்டு
விரைத் தொடையற்சாத்தி மிளிர்சிலம்பு விட்டு
அரிபிலஞ்சென்று மறியொரணைமலர்
அம்புயப் பதத்தில் வீரக்கழ லிட்டுக் (கல்யாண)

32 இராகஞ்-சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

மாமதுராபுரிக் கெழுந்தானே—யெந்தை
மாறன்மகண் மணஞ்செய் திடத்தானே

அனுபல்லவி.

சோமகலாதர நாமகணிதருணை
சுந்தரேச பூதேச சர்வேசன்

சரணம்.

சங்கு கர்ணன் கும்போதரன் முதற்பூத
சயினியங்கள்சூழக்—குளிர்
சலசநயன னயனிந்திரன் சந்த்ரனெடு
சகலதேவ ருந்தாழ

முடுகு.

செங்கையினிற் படைகளுங் கொடுநீடிச்
சிவகணங்கள் விரைவொடு சதகோடி
பங்கதாகக் கூர்மாண்டர் கள்கூடிப்
பரவியேவர விருபானெட் டுக்கோடி
படருந்திக்குப் பாலகர்நீல லோகிதாவ்ஷ்ட
பயிரவர்களும் வரப்பக்தர்க் கருளும்வர (மாமது)

2 வது சரணம்.

நாற்பத்தொன்ப தெனுமருத்து தேவர்களும்
ரவிசசி நவக்ரகமுட னஷ்டவசுக்களும்
எற்பவியா க்ரதபாதர் பதஞ்சலி யுபமன்யு
விலகுகும்பமுறை குருமுனி யுடன்வர
வெழிலுறு சனகாதியரொடு சேர்ந்தே
யீசன்றிரு மணத்திலே மகிழ்கூர்ந்தே
அழகொழுகிய சுகன்வியாதன் வாமதேவன்
அனைவரும்வர வருளோங்கும் வித்யாநகர்

33 இராகம்-கௌளிபந்து-தாளம்-சாப்பு.

பல்லவி.

தேவதேவன் மதுராபுரி வந்தானே
சேவையன்பர்க் குதந்தானே

அனுபல்லவி.

மூவர்க்குமேன்மறையோன் யாவர்க்குமேயிறையோன்
முக்கண்ணன் குகன்றந்தை செக்கர்ச்சடை யெந்தை

சரணம்.

மேகத்தவழு மாடமேலுயர்வீதி
விளங்கவிடையின்மேற் ப்ரவேசஞ்செய்யாதி

2 வது சரணம்.

பூமகன்மால்காணு முதலந்தமில்லாப்புண்யன்
யாவையுமாக்குமையான னுங்கண்யன்

3 வது சரணம்

அரசிராஜரீக மந்திரிசயனி யஞ்சூழ
வனந்தராஜர்கள் வந்தடியிணை தனிற் ருழ

4 வது சரணம்.

தேசதேசத்துள்ள ஸ்த்ரீகளெல்லாரும்
சிந்தைமகிழ்வாய்க் காணவிந்துவிளுரும்

5 வது சரணம்.

மாதர்களநந்தம் வந்தொன்ருக்கூடி
வருந்துகின்ருரையன் வடிவெல்லாநாடி

6 வது சரணம்.

சீதமதிதரித்தோன் காதல்மிகவுநம்மைத்
தீய்க்குதடி யென்பார் சிலமாதுர்

7 வது சரணம்.

கமழுங்கமலக்கா நிறைகருணைவாரிதி
கட்டழகுண்டிருக் தார்சிலமாதுர்

34 விருத்தம்.

சோமக லாதா ஞர்மது ராபுரி சூழ்பிர தக்ஷணமாய்
மாமகள்காணி கொண் மாவளமீறிய மாறன் மனைக் கெதிரே
நாமலர்வேதமதே தழைவேதியர் நான்மறை சொஸ்தி சொல
ஶ்ரீமலிகாவரை நீடுமொளிகை கோபதி யுற்றனனே.

35 இராகம்-மோகனம்-தாளம்-ஆதி,

பல்லவி.

வந்தான் சுந்தரேசன் கன்னி யாசியாண்
மனைக்குண் மகிழ்வாய்த் தானே

அநுபல்லவி

நந்தியின் வந்திறங்கு மெச்சை யிருபுறத்தும்
நாரணனயன் கயிலாகு கொடுக்க
நம்புமடியர் பவபாசம் விடுக்க. (வந்தான்)

1-வது சரணம்

செப்பை நிகர்முலையார் கற்பூரதீபங்கொண்டு
சுப்ரகாசன் முன்னின்று சுற்ற முத்தாரங்கொண்டு
அப்பன்மகிழ்ந்து கோயிலுட் புகமறைவிண்டு
அந்தணர் சொஸ்திசொல்ல வாகமவிதிமண்டு

முடுகு

அருமறைப் பாதுகையடிகள் சுமப்ப
அரவுரிநிகர்விரி துகின்மலர் மொய்ப்பப்
பெருகிய நறைபத யுகளநனைப்ப
பேரொளி மகுடம் பூமாரி புதைப்ப (வந்தான்)

2-வது

கல்யாண மாதரொடுங் காஞ்சனமாலை வந்து
கங்கை முதற்றீர்த்தந் தங்கக்குடத்திற் கொணர்ந்து
அல்லாருங் குழல் நல்லார் வார்க்கவுவந்து
ஐயன் கமலபதமாட்டி மனமகிழ்ந்து
அடியபிஷேக ஜலமருந்திச் சிரத்திற்பெய்து
அடிதுவர்த்திச் சந்தனபுஷ்ப வர்ச்சனை செய்து
முடிமிசையிரு காமுகிழ்த்துள மகிழ்வெய்து
மொழியிற்றுதித் தாளன்பர் முதிர்பவக்காடுகொய்து (வந்)

3-வது சரணம்

அருந்தவஞ்செய்து பெற்றவணங்கை மங்கலஞ்சூட்டித்
திருநகர்த் திருக்கன்னித் தெய்வத்தினையுங்கூட்டி
அருமையாகவாக்ஷி செய்யென்றுள் ஸ்ரீமாட்டி
அதர்க்குள்ளங் கொண்டுமந்த ஹாஸஞ்செய்பரமேட்டி

முடுகு

அந்தணர் மறைமுழவந் தமதமவென
வந்தனன் வதுவையிடந் தனிலொளி மினச்
சுந்தரவரிய யனிந்திரன் முதற்றன்ன
எந்தைகடைக்கண் செயத்தந் தத்தவிசின்மன்ன (வந்)

36 விருத்தம்

மறைமுழவங்குழல் வீணைவாத்தியங்கண்முழங்க வெள்ளிமலையா
றெந்தை
யிறைகொண்டு பொன்மணியாசனத் தினிலிந்திரன் முதலா
மிமையோர் தம்மை
முறைமுறையன்னோர்க் கமைத்த தவசினுறக்கடைக்கணித்து
முற்று முற்றுக்
கறைகரந்த களத்தின னல்லோரை வருமளவுநடங் கண்ணுற்றானே

37 இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

திருமணக் கோலங்கொண்டாளே வர
சிவசங்கரி திரிபுரசங்கரி திகழ்வுறுசங்கரி லோதரி மங்களகரி (தி)

அநுபல்லவி.

மும்முரசுமுழங்க மூழ்கிநுண்டு சணிந்து
அம்மைத விசையுற்ற கத்திற்றெய்வம் பணிந்து
செம்மையாய் நித்யதானஞ் செய்துறவே துணிந்து
செம் மலராளுமயன்றே வியுமே தணிந்து

முடுகு.

செங்கமலகர வலங்கிர்த வணியுல
கங்களறியவே செய்யிங்கிதசுபகர (திருமண)

சரணம்.

காந்ததளங்கைவிரலிற் கவினுற வாழிகோத்துக்
கதிர்செய் வஜ்ரகடகங் கலிக்குந் தொடிகள் சேர்த்து
வாய்ந்த கழைப்பு ஜத்தில்வளையிட்டு மகிழ்சூர்த்து
வடமேருமூலக்கார வடமிட்டணிகள் பார்த்து

முடுகு

மரகதத்தாலமை மாலை பொன்மாலையும்
வான்விடு பவளமந்தாரமாலை யொடு
பரையிருகாதினுங் குழைநுதலிலம்பகம்
பரிமளசுகந்தங்கொள் கோதையணியவாலை (திருமண)

2-வது.

அனிச்சமலரு மஞ்சுமடியிற் செம்பஞ்சுதீட்டி
அல்லை நிகர் குழலிலகிற் சாந்துகள்கூட்டித்
தனமுகட்டிற் பன்னீர் சந்தன குங்குமங்களாட்டிச்
சரணிணை தனிற்பாத ஜாலக்கிங்கிணி பூட்டித்

முடுகு

தழைக்கு முப்பத்திரண்டு கோவைகொள் விரிசிகை
சாயிரு பத்தொன்பதாற் கலாபவணியுவகை
யிழைக்குங் கனகமணிப் பருமமேகலைதகை
யின்பக்காஞ்சியை வகையிடவம்பிகை (திருமண)

38 இராகம்-கமாஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

மணவறைக் கெழுந்தாளே நான்
மறைமுழங்க மங்கல முழவார்தழங்க

அநுபல்லவி.

அணியிழையார் கௌரிகல் யாணவைபோகமென
அம்பொன்னடைப் பையெடுத்தருகிற் சுந்தரிமன்ன

சரணம்.

அரம்பை காளாஞ்சிதாங்க வாலவட்டமு மோங்க
தாமிகூர்லசி திலோத்தமை கோடிகர்தாங்க

2-வது

பாடகமெல்லடி கள்பையப் பையவே வைத்துத்
தோடவிழ்மலர் விரிதுகிலின் மெல்லச்சரித்து

3-வது

திருமகள் கலைமகள் சேர்ந்துற்ற ரன்பருக்குத்
தருங்கல்வி செல்வமெனச் சாணூபுரமொலிக்க (மண)

39 விருத்தம்.

மணவணிநிறைவுறுபரை சுபகரிகயல்வரி விழியுலகங்காணுக்
குணநிதிமதிநுத லதியழகுயர்பவள் குலமலையுதவன்னை
இணைதனை நிகர்பவளென திறைமகிழ்பவளிமை யவர்களை
கண்ணுள்
பணைமுலையவன் மணவரை யமர்பதியொடுபெதி வுறவுற்றனனே

40 இராகம் பெலகரி தாளம் ஆதி.

பல்லவி.

மங்கள கல்யாணஞ் செய்தானே கயிலை மலை
வாஸன் மந்த ஹாஸன் சுந்தரேசன் சுப்ரகாசன் சுப.

அனுபல்லவி.

திங்கள் வம்சத்திற் பிறந்ததேவி தடாதகையான
பங்கஜ வதநியாஞ் சௌபாக்கியவதியை வைபோக (மங்கள)

சரணம்.

சங்கு சக்கரதானா னிங்கித மலர்ப்பதத்தைத்
தன்கைச் கரகஜலத்தால் மங்களாபிஷேகஞ் செய்து
கொங்குயரும் புஷ்பசந்தனங் கொடருச்சிக்கவய
னுங்குலவு தேவருந்தானும் பரிசித்து ருசிக்க (மங்கள)

2-வது சரணம்.

புங்கவிதடாதகையின் பங்கஜ மலர்க்கரத்தைச்
சங்கரனெனிதரு 'கரங்களின்மேல் வைத்தெழில்சேர்
மங்குல்வண்ணன் கரகநீர் மங்கை கையிற்றாரைவார்க்க
விங்கித நடனஞ் செய்யப் புங்கவர் பூமழை பெய்ய (மங்கள)

3-வது சரணம்.

பூசுரர் தேவர் முனிவர் தேசுயர் குங்குமாக்ஷதை
வீசியே சொஸ்திவாசகம் பேசிடச்சுரபித்தீம்பால்
ஆசறுகற்பகக் கன்னல் மாசில்கனி மதுவர்க்கம்
பாசனத்திடவே ருசித்தீசனுமதைப் புஜித்து (மங்கள)

41 கண்ணிகள்.

இராகம் காம்போதி—தாளம் ஆதி.

செந்திருமகள்வாணி யந்தணர் பன்னியருஞ்
சேர்ந்தனரே மகிழ் கூர்ந்தனரே
சுந்தரிகௌரிகல் யாணவை போகமெனச்
சூழ்ந்தனரே மிக வாழ்ந்தனரே
கந்தமல ரயனேடந்தணர் செயும்வேள்வி
கலித்ததுவே யக்னி சொலித்ததுவே
சந்தமறை முழவமொர்த்தை யொலிதிக்கெங்குஞ்
சார்ந்ததுவேசுக நேர்ந்ததுவே

சிந்தைமகிழ வேள்விச் செந்தீவலஞ் சுற்றிடத்
தெரிந்ததுவே மிகுந் தெரிந்ததுவே

செந்தழலக்னி தேவனுந்தன்னெழு நாவுண்ணச்
செய்தனரே நெய்மழை பெய்தனரே

பின்புதன் பன்னியொடும் வேள்வித்தீயினிற்பொரி
பெய்தனரே மகிழ் வெய்தினரே

வாமிமீநாக்ஷி யொடும் யாககுண்டத்தைச்சுற்றி
வந்தனரே மனமு வந்தனரே

அருந்ததியிதுவென வருந்ததி நேர்வா
வாட்டினனே யுமைக்கிக் காட்டினனே

திருமணக்கிரியை யெல்லாஞ் செய்தபின்ற விசினிற்
சேர்ந்திருந்தார் களி கூர்ந்திருந்தார்

ஸ்ரீதானயன் முதற்றேவர் கட்கும்வரிசை
செய்திடவே உலகெய்திடவே

தேசராஜர்க்கெல்லாம் நேசமரியாதைகள்
தேக்கினரேபதிக்குப் போக்கினரே

அந்தணர் வித்வஜனர்யாவர்கட்கும் பொன்பணி
அளித்தனரே மனது களித்தனரே

மிருகமதம் பனிநீர் மெல்லிலை யடைக்காயும்
விளம்பினரே முகமன் விளம்பினரே

இன்மையினன்மைதரு மீசப்ர திட்டையொன்
றியற்றினனே தசப் புயத்தினனே.

செந்திருமகள் முற்றிற்று.

சுபம்.

---